www.Padasalai.Net

Padasalai Official – Android App – Download Here

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11th Standard | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10th Standard | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |


**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 1

## செய்யுள், உரைநடை

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக 7×1 = 7

1. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் ? யார் ?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

2. பொருத்தித் தேர்க

அ) உரிமைத் தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
ஆ) அந்தாடி - 2. பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்பமுறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2 4 3 1 ஆ) 3 4 1 2 இ) 2 4 1 3 ஈ) 2 3 4 1

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் என்னும் விதிப்படி அமைந்த சொற்கள்.

அ) உன்னுடையது, மண்ணில் ஆ) நன்னுதல், அன்னவன்
இ) சென்றவர், உற்றார் ஈ) சிற்றம், சென்றார்.

Scanned with CamScanner

ஸ்ரீ தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்லின்

5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்தவை அவை

அ) அறவோர், திறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நீதியும் சிங்கமும்

6. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூக முறை ஈ) தந்தைவழிச் சமூகமுறை

7. பொருந்தாததைத் தேர்க

அ) சிலம்பு கழி - நோன்பு

ஆ) புக்கில் - தற்காலிகத் தங்குமிடம்

இ) மணந்தகம் - இல்லறத்தின் இறுதிக்கட்டம்

ஈ) இளமகவுநிலை - ஐங்குறுநூறு

II. எவையேனும் மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக 3x2=6

8. புக்கில், தன்மனை - சிறுகுறிப்புத் தருக

9. நிலையாமை குறித்து, ஔவை உரைக்கும் கருத்து யாது?

10. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

11. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

III. எவையேனும் இரண்டனுக்கு ஆறு வரியளவில் விடை தருக. 2x4=8

12. "வருபவர் எவராயினும் நன்றி செலுத்து" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குமரி தமிழமுது

எம். ஏ. ஜெலஸ்டின்

13. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

14. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

IV. அடிப்பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக $1 \times 4 = 4$

15. 'தூய்ய உளது...' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

எம். ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேனிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4
9843448095
20/04/2020

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 1

## செய்யுள், உரைநடை

## விடைகள்

கனி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக

1. இ) இராமன், சுக்ரீவன்
2. இ) 2 4 1 3
3. ஈ.) இவை அனைத்தும்
4. அ) உன்னுடையது, மண்ணில்
5. அ) திருமணமும் குடும்பமும்
6. ஈ.) தந்தை வழிச் சமூகமுறை
7. இ) மணந்தகம் - இல்வாறத்தின் இறுதிக்கட்டம்

II. மூன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக 3x2=6

8. புக்கில்

புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கும், "தகள் அறுகேள்வி உயர்ந்தோர் புக்கில்" என்ற புறநானூற்றுப் பாடலில் (222:6) வரும் புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கின்றது.

தன்மனை :

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் 'தன்மனை' என அழைக்கப்பட்டது.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

9. நிலையாமை குறித்து, சிவரி உரைக்கும் கருத்து

பொய்யான உலகப்பற்று அழிந்து போகக் கூடியதாகும். உலகத்தின் மீது பற்றுக் கொள்வது வீணாகும். என் மண்ணுலகப் பிறவி ஒழிந்தது. ஏனெனில் நிலையாமை என்பது உலக வாழ்வு நிலை இல்லாதது என்பதைக் குறிப்பதாகும்.

10. எதிர்பாராத நிகழ்வுகள் - உருவகம்

மனித வாழ்க்கையில் நடக்கின்ற எதிர்பாராத நிகழ்வுகளான ஓர் ஆனந்தம், சிற்று மனச்சோர்வு, சிறிது அற்பத்தனம், நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு எல்லாம் நமது இல்லத்திற்கு வரும் எதிர்பாராத விருந்தாளிகளாக உருவகப்படுத்துகின்றார்.

11. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள்

தாய்வழிச் சமூகமுறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன. தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவராக இருந்தனர். திருமணத்திற்குப் பின்னர் தன் வீட்டிலே தொடர்ந்து வாழும் தாயமுறையும் வழக்கத்தில் இருந்துள்ளது.

III. எவையேனும் இரண்டனுக்கு ஆறு வரியளவில் விடை தருக 2x4=8

12. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம்

இடம்:

இப்பாடல் வரிகள் ஜலாலுத்தீன் ரூமி அவர்கள் எழுதிய கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் இருந்து சில பாடல்களை என்.சத்தியமூர்த்தி என்பவர் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். அத்தொகுப்பில் உள்ள 'விருந்தினர் இல்லம்' என்னும் பகுதியில் இவ்வரி இடம் பெற்றுள்ளது.

பொருள்:

இவ்வுலகில் வாழ்கின்ற நாம், தினமும் சந்திக்கின்ற எதிர்பாராத இன்பம், துன்பம், அவமானம், வக்கிரம், வஞ்சனை எதுவானாலும் அதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

முதிதமிழுதி

எம்.ஏ. ஜெபஸ்டின்

விளக்கம் :

மனித வாழ்க்கை விருந்தினர் இல்லம் போன்றது. நம் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் எல்லோரும் ஒரே மனநிலையில் வருவதில்லை. ஒரே மாதிரியான செய்திகளையும் கொண்டு வருவதில்லை. அதுபோன்றே நம் வாழ்க்கையும் சந்திக்கும் அனுபவங்களான ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு, ஆக்கிரம், அவமானம், வஞ்சனை, துக்கம் என்பவை பல வாழ்வியல் வடிவங்களில் வரும். அவை நமக்குப் புதிய உவகையையும், புதிய வழிகாட்டுதல்களையும் தருவதால் 'வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும்' என்று கவிஞர் கூறுகிறார்.

---

13. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகள்

கங்கையைக் கடந்து செல்ல படகு கொண்டு வந்த குகன் இராமன் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பை உணர்ந்த இராமன் தன் இனிய நண்பனாக ஏற்றுக் கொண்டான். குகனிடம் நீ கூறும் வேலைகளைச் செய்யும் உன் பணியாளனாய் இருக்கின்றேன் என்று கூறி, உன்னையும் என் சகோதரனாக ஏற்றுக் கொண்டேன். "இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்" என்றான்.

இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பால் இலங்கைச் சென்று இராவணனிடம் போர்புரிந்து திரும்பிய சுக்ரீவனைப் பார்த்து இராமன் இனி நீ வேறு; நான் வேறு அல்ல என்று கூறினான். 'நீ என் உயிர் நண்பன்' என்று கூறி, நான்கு பேராக இருந்த நாங்கள் குகனுடன் சேர்ந்து ஐந்து பேரானோம். உன்னையும் என் சகோதரனாக ஏற்றுக்கொண்டு, 'இனி அறுபேர் ஆனோம்' என்றான்.

சீதையைக் கவர்ந்து வந்த செயல் தவறு என்று கூறியதற்காக இராவணன் வீடணனைக் கடிந்து கொண்டான். அதனால், வீடணன் இலங்கையை விட்டு வெளியேறி இராமனிடம் அடைக்கலம் வேண்டினான். அடைக்கலம் கொடுத்த இராமன் அவனுக்கு இலங்கை அரசையும் உரிமையாக்கி, அவனையும் தன் சகோதரனாக ஏற்றுக்கொண்டு, 'நின்னொடும் எழுவர் ஆனோம்' என்றான்.

---

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com





எம்.ஏ. ஜெஸ்டின்

14. குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள்

நான் சாப்பிடும் தட்டுகளையும், நான் நீர் அருந்தும் குவளைகளையும் சுகாதாரமான முறையில் நானே தூய்மை செய்வேன். எனது படுக்கை விரிப்புகளையும் போர்த்திக் கொள்ளும் போர்வையையும் நானே தினமும் பராமரிப்பேன். என்னுடைய ஆடைகள் அனைத்தையுமே நானே சலவை செய்து தூய்மையாக உடுத்துவேன். என் வீட்டில் இருக்கும் தோட்டத்திற்குக் காலை, மாலை என இரு வேளைகளிலும் தண்ணீர் ஊற்றுவேன்.

வீட்டைத் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் என் பெற்றோருடன் இணைந்து கொள்வேன். வீட்டைத் தூய்மையாக வைத்திருப்பதில் எப்போதும் என் பெற்றோருக்குத் துணையாக இருப்பேன். வீட்டிற்குத் தேவைப்படும் பொருட்களைக் கடைக்குச் சென்று வாங்கி வருவதில் முனைப்புடன் செயல்படுவேன். தெருக்குழாய்க்குச் சென்று வீட்டிற்குத் தேவையான குடிநீரைக் கொண்டு வருவேன். வீட்டின் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க பெற்றோருக்கு உதவியாக இருப்பேன்.

IV. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 1x4=4

15.

துன்பு உளதெனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளதென உன்னேல்;
முன்பு உளம்ஒரு நால்வேம்
முடிவு உளதென உன்னா
அன்பு உள, இனி, நாம்ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்

எம்.ஏ. ஜெஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேல்நிலைப் பள்ளி,
நாகர்கோவில் - 4
9843448095
21/04/2020

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 2

## இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

குமரி தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக 7x1 = 7

1. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக

அ) பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்

ஆ) பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்

இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்

ஈ) தேரைப் பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்

அ) 4 1 3 2 ஆ) 2 3 1 4 இ) 4 3 1 2 ஈ) 2 4 1 3

2. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

3. சரியான தொடரமைப்பு எது?

அ) அணங்கு கொல் வந்தாள்

ஆ) கத்து கடல் ஒலமிட்டது

இ) ஈக் கள் மொய்த்தன

ஈ) மேடுபள்ளம் பார்த்துப் போ

4. பொருந்தாததைத் தேர்க

அ) உம்மைத் தொகைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்

ஆ) நேரிணைச் சொற்களைச் சேர்த்து எழுதக் கூடாது.

இ) வினைத்தொகை சொற்களைப் பிரித்து எழுதக்கூடாது

ஈ) உரிச்சொற்களை வினையுடன் எழுதும்போது பிரித்து எழுதக்கூடாது

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழமுது

எம்.ஏ.ஜெயாஸ்டின்

5. பொருத்தித் தேர்க

அ) குதிரைகள் - 1. அன்று

ஆ) அவன் - 2. அல்ல

இ) நாய் - 3. அல்லர்

ஈ) அவர் - 4. அல்லன்

அ) 2 1 4 3 ஆ) 2 4 1 3 இ) 3 1 2 4 ஈ) 4 3 2 1

6. 'குறுக்கம்' என்ற பேச்சு வழக்குச் சொல்லின் எழுத்து வழக்குச் சொல்

அ) குறுகிய ஆ) சிறிய பகுதி இ) சிறிய நிலப்பரப்பு ஈ) சிறிய வீதி

7. பூமணி எழுதிய புதினங்கள்

அ) கொம்மை, வாய்க்கால் ஆ) வாய்க்கால், வயிறுகள்

இ) கொம்மை, நொறுங்கல்கள் ஈ) வாய்க்கால், நொறுங்கல்கள்

II. எவையேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரியளவில் விடை தருக

2x2=4

8. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

9. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

10. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

அ) கொண்டு < ஆ) தானே <

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

குமரி தமிழமுது

எம்.ஒ. ஜெயலஸ்டின்

III. அனைத்திற்கும் விடை தருக 4×2 = 8

11. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக்கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

ஆ) மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

12. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.

அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.

ஆ) சான்றோர் மதிப்புக் கொடுத்து வாழ்வு உயரலாம்.

13. தமிழாக்கம் தருக.

அ) Tips ஆ) Checkout.

14. சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க

அ) விட்டான் < ஆ) முன் <

IV. இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 1×6 = 6

15. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

எம்.ஒ. ஜெயலஸ்டின்
முதுகலைத் தமிழாசிரியர்
கார்மல் மேனிலைப் பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095
21/04/2020

Scanned with CamScanner

# இயல் - 3

## உள்நிலைத் தேர்வு - 2

## இலக்கணம், மொழிப்பயிற்சி, துணைப்பாடம்

## விடைகள்

தமிழ்தமிழமுது

எம்.ஏ. ஜெஸ்டின்

வகுப்பு : 12

நேரம் : 40 நிமிடம்

மதிப்பெண் : 25

I. பலவுள் தெரிக — 7x1 = 7

1. இ) 4 3 1 2
2. இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்
3. ஈ) மேடுபள்ளம் பார்த்துப் போ
4. ஆ) நேரிணைச் சொற்களைச் சேர்த்து எழுதக் கூடாது.
5. ஆ) 2 4 1 3
6. இ) சிறிய நிலப்பரப்பு
7. அ) கொம்மை, வாய்க்கால்

II. எவையேனும் இரண்டனுக்கு இரண்டு அல்லது மூன்று வரியளவில் விடை தருக — 2x2 = 4

8. சான்று
   1) அவள், அக்கா வீட்டிற்குச் சென்றாள்
   2) அவள் அக்கா, வீட்டிற்குச் சென்றாள்.

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



இமிழ் தமிழமுது

எம்.ஏ.ஜெயலலிதா

9. 'திருவளர் செல்வன்' என்ற தொடரே சரியான தொடர்.

'வினைத்தொகை சொல்லுக்கிடையில் வல்லினம் மிகுதல் கூடாது' என்ற இலக்கண விதியின் படி 'திருவளர்செல்வன்' என்பதே சரியான தொடராகும்.

---

10.

அ) கொண்டு

(i) சோமு கையில் கத்திக் கொண்டு ஓடினான்.

(ii) சோமு கத்திக்கொண்டு ஓடினான்.

ஆ) தானே

(i) கண்ணன்தானே படித்தான்.

(ii) கண்ணன் தானே படித்தான்.

---

III. அனைத்திற்கும் விடைதருக 4×2=8

11. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

அ) நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.

ஆ) மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

---

12. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக

அ) காலையில் எழுந்து படித்தால், நமக்கு நன்மை ஏற்படும்

ஆ) சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரித்தமிழமுது

எம்.ஏ. ஜெலஸ்டின்

13. தமிழாக்கம் தருக

அ) Tips - சிற்றீகை

ஆ) Checkout - வெளியேறுதல்

---

14. சொல்லுருபைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடராக்கு

அ) விட்டான்

(i) அண்ணன் அடித்து விட்டான்.

(ii) அண்ணன் அடித்துவிட்டான்.

ஆ) முன்

(i) அவன் முன்வந்து கூறினான்.

(ii) அவன்முன் வந்து கூறினான்.

---

IV. இருபக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 1×6=6

15. கதைச்சுருக்கம்:

பூமணி அவர்கள் இயற்றிய 'உரிமைத்தாகம்' என்னும் கதையில் வெள்ளைச்சாமி தன் அண்ணனுக்குத் தெரியாமல் தன் வெள்ளாண் நிலத்தைப் பங்காரு சாமியிடம் இருநூறு ரூபாய்க்கு அடகு வைக்கிறான். அதை அவனது அண்ணன் முத்தையனிடம் அவனது மனைவி மூக்கம்மா கூறுகிறாள். தம்பியிடம் மனவருத்தத்தில் பேசாமல் இருந்தாலும் பாசத்தினால் அவனது நிலத்தை மீட்க பங்காரு சாமியிடம் சென்று நிலத்தை மீட்க இருநூறு ரூபாயைக் கொடுக்கும்போது அவர் நானூறு ரூபாய் என்று பொய் சொல்கிறார். எனவே, சகோதரர்கள் இருவரும் இணைந்து பங்காரு சாமியிடம் சண்டையிடுகின்றனர்.

இரு சகோதரர்களும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்...

கதை தொடர்கிறது....

'என்னத்த சொல்ல உங்க தம்பி நிலத்த அடகு வச்சிருக்காராம்... வீட்டில ஒரே சண்டையா இருக்குது...' என்ற மூக்கம்மாவின் பேச்சிற்குக் கொஞ்சமும் காது கொடுக்காத முத்தையன் தன் வேலையிலே மும்முரமா இருந்தான்.

Scanned with CamScanner

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



குமரி தமிழமுது

எம். ஏ. ஜெலஸ்டின்

'என்னது நான் சொல்லுறது காதுல விழுறதா!' என்ற மனைவியின் பேச்சுக்கு, இப்ப என்ன கொறஞ்சி போச்சி, நம்ம பேச்ச கேட்காம போனவன்தானே, அவன் எப்பாடு பட்டா நமக்கென்ன, நமக்கு இருக்கிற கஷ்டத்தில இது வேறயா?

அந்தப் பங்காருசாமி வேற பொல்லாத மனுசன் கிரயம் வாங்கிட்டுதான் ரூபா கொடுத்திருப்பான்... நான் கேட்க போனா அவன் கோர்டு கேஸ்ன்னு நம்மள போட்டு அலைப்பான்... இது நமக்குத் தேவையா?

இந்த வெள்ளச்சாமி பையன் கொஞ்சமாவது பொறுப்போட நடக்கண்டாமா? அவன் என்ன பத்தியும் உன்ன பத்தியும் ஊருக்குள்ள என்னல்லாமோ சொல்லிருக்கான்... பட்டு அனுபவிச்சாதான் தெரியும்... அவன் நிலத்த இழந்திட்டு நம்மக்கிட்ட திரும்ப வந்தா தான் நமக்க அரும தெரியுமுன்னு சொன்ன தன் கணவனைப் பாத்து மூக்கம்மா பதில் எதுவும் பேசாம இருந்தாள்.

எதிர்வீட்டில இருந்து வந்த சத்தத்த கேட்டு முத்தையன் சுண்ட எடுத்துப் போட்டுகிட்டு வயலுக்குக் கிளம்பினான். பங்காருசாமி வெள்ளசாமிகிட்ட பேசியது அவன் காதுல கேட்டுட்டே இருந்தது... 'டே... வெள்ளசாமி நீ கிரயம் எழுதிக்கொடுத்த நாள் முடிஞ்சாச்சி, என்ன பண்ண போற ஒண்ணுல ரூவாவ கொடு இல்ல நிலத்த எழுதி கொடு' என்ற வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

இரண்டு வாரம் கழிச்சி வெள்ளச்சாமியின் நிலத்த பங்காருசாமி எழுதிவாங்கிட்டதையும் அதனால வெள்ளச்சாமியின் மனைவி கோபப்பட்டுட்டு அவ அப்பா வீட்டுக்குப் போய்விட்டதாகவும், வெள்ளச்சாமி இப்போது கூலிக்கு எங்கேயோ போவதாக மூக்கம்மா கூறிய வார்த்தைகள் கேட்ட முத்தையாவின் உள்ளம் துடித்துடித்தது... அப்படியே வீட்டின் மேற்கூரையை வெறித்து பார்த்தபடி முத்தையன் நின்று கொண்டிருந்தான்.

எம். ஏ. ஜெலஸ்டின்,
முதுகலைத் தமிழாசிரியர்,
கார்மல் மேல்நிலைப்பள்ளி
நாகர்கோவில் - 4
9843448095

23 04/2020

Scanned with CamScanner
Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com